

# VAROD

ENABLING BETTER
WAYS FOR LIVING

## VANNI REHABILITATION ORGANIZATION FOR THE DIFFERENTLY ABLED

பதிவுகள்.......

Achievements......

MAY2009-MAY 2010

NO.15, 8th lane,
Mannar Road,
Veppankulam,
Vavuniya,
Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கும் நோக்கும்

வவுனியா, கிளிநொச்சி, மற்றும்
முல்லைத்தீவு, மாவட்டங்களிலுள்ள
மாற்றுவலுவுடையோர்க்கு சிறந்த
ஒழுங்கமைக்கப்பட்ட கல்விசார், மருத்துவ,
பொருளாதார, செயற்பாடுகள் மூலமாக
எவ்வித பாகுபாடுகளுமின்றி
நிறைவான முழு வாழ்வு
வாழ வழிகாட்டல்.

# VISION WITH A MISSION:


"VAROD visualizes, the empowerment of the differently abled persons of Killinochchi, Mulaithievu and Vavuniya districts, through a wide range of specially arranged and designed educational, medical and economical programs, to participate, enjoy and realize equally in cultural and social spheres without any hindrance and to achieve equal and integrated living and economical independence and thereby live their lives in full potentials."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதியப்பட்டுள்ள பதிவுகள்


| | |
|---|---|
| இலக்கும் நோக்கும் | 01 |
| நிறைவேற்று இயக்குனரின் செய்தி | 02 |
| நிர்வாகக் கட்டமைப்பு | 03 |
| அறிமுகம் | 07 |
| வரோட் பெண்கள் வலுவூட்டல் நிலையம் | 08 |
| வரோட் ஆண்கள் வலுவூட்டல் நிலையம் | 10 |
| வரோட் வலுவூட்டல் நிலையம், பம்பைமடு | 13 |
| சமுகம் சார் வலுவூட்டல் நிகழ்ச்சி | 15 |
| எதிர்காலத் திட்டங்கள் | 17 |
| வரோட் நிறுவனத்தின் கண்காட்சியும் விளையாட்டுப் பெருவிழாவும. | 19 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VAROD
No: 15, 8th Lane,
Mannar Rd,
Veppankulam,
Vavuniya,
Sri Lanka.

Dear Friends,

In accordance with the signs of the time the VAROD is established for the differently abled people who are affected by the conflict situation and Most of the time who are marginalized by their own society.

We try to put forward in 'PATHIVUKAL' what we have achieved from May 2009 to till now.

No man, neither any organization is an island; It is through team work we can do marvels. Thus we gratefully remember all of you who have helped us in this task of empowering the differently abled.

I pray, that our service for the upliftment of the humankind may be blessed by the Almighty God.

Fr. Albert J. Arulraja CMF
Executive Director,
VAROD.

அன்படையீர்,

காலத்தின் தேவைகளை அறிந்து, அதிகமதிகமாக நாட்டில் நடைபெற்ற அசாதாரண நிலைகளாலும், சமுதாயத்தினால் ஒதுக்கப்பட்ட நிலைகளினாலும் பின்தள்ளப்பட்ட மாற்று வலுவுடையோர்களுக்காகவே இவ் வறோட் அமையம் அமைக்கப்பட்டது.

சென்ற ஆண்டு மே மாதம் முதல் இவ் 2010 ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான காலப்பகுதியில் எம்மால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்பினை **"பதிவுகளாக"** இங்கே தருகின்றோம்.

எந்த ஒரு தனி மனிதனோ அமையமோ ஒருபோதும் தனித்து நிற்க முடியாது. எனவே பல்வேறு வடிவங்களில் நீங்கள் ஆற்றிய ஒவ்வோர் நற்காரியங்களுக்காகவும் நன்றி கூறுகின்றோம்.

மானிட உயர்வு நோக்கிய எம் எல்லோராது பணிகளும் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்கின்றேன்

அன்புடன்
அருட்தந்தை அல்பேட் ஜோ அருள்ராஜா CMF
நிறைவேற்று இயக்குனர்
வறோட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VAROD இன் நிர்வாகக் கட்டமைப்பு

மன்னார் மறைமாவட்ட ஆயர்
**அதிவந். இராயப்பு யோசப் ஆண்டகை**
*(போசகர்)*

## நிறைவேற்று சபை

அருட்தந்தை T.L றொகான் டொமினிக் **CMF**
*(தலைவர்)*
சபையாள் தெரிவு செயய்யப்பட்ட இரு நிர்வாக ஆலோசகர்கள்
அருட்தந்தை அல்பேட் J அருள்றாஜா **CMF**
*(நிறைவேற்று இயக்குனர்)*

## நிர்வாக சபை

**அருட்தந்தைஅல்பேட் J அருள்றாஜா CMF** *(நிறைவேற்று இயக்குனர்)*
**தலைவர்**
அருட்தந்தை ச. சதீஸ் CMF *(செயலாளர்)*
வைத்தியர் சூசை யோசப் *(ஆலோசகர்)*
அருட்தந்தை P.றொனால்ட் சுஜீபன் **CMF** – உதவி இயக்குனர்

## அலுவலக நிர்வாகம்

திரு ம அமிர்தானந்தன் - *(நிர்வாக ஊழியர்)*
திரு H தோமஸ் அன்ரு – *(கணக்காளர்)*
திருமதி S அமலோற்பவம் - *(காசாளர்)*
திரு A யோன் எமில்ரன - *(அலுவலக உதவியாளர்)*
திரு S வதனோஜன் - *(களஞ்சியக் காப்பாளர்)*
திரு K செல்லத்துரை - *(காவலாளி)*
திரு லக்ஸ்மன் - *(சாரதி)*
*திரு கோபிக்ண்ணா (உதவிக்கணக்காளர்)*
*செல்வி ஆஷா (உதவி நிர்வாக ஊழியர்)*

## சமுகம் சார் வலுவூட்டல் ஊழியர்கள் (CBR)

அருட்தந்தை வரதன் குலாஸ் CMF *(இணைப்பாளர்)*
திரு S A லியோ – *திட்ட வகுப்பாளர்*
திரு இளையதம்பி முகுந்தன் - வெளிக் *களநிலை ஊழியர்*
திரு A றெனிசியஸ்
திரு S விக்ரர்
திரு S பிரபாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி S மனோரதி
திருமதி K நிலாகுமாரி
திரு R றெஜிகுமார்
செல்வி A J மைதிலி
திரு.V.யோசவ் பிரசாந்
திரு K யசோதரன்
செல்வி S சசிந்தினி
திரு T ஜெனிஸ்ரன்
செல்வி J ஜெனிற்றா

## பெண்கள் நிலையம்

அருட்தந்தை P.றொனால்ட் சுஜீபன் **CMF** - *இணைப்பாளர்*
அருட்சகோதரி பேரின்பமலர் - *பொறுப்பாளர்*
அருட்சகோதரி அன்ரனிற்ரா – *உதவிப் பொறுப்பாளர்*

**சிறுவர் பராமரிப்பாளர்**

திரு. சிவஞானம் மேனகா
செல்வி. சுதர்சினி
திருமதி. யேசுதாசன் சுஜித்தா
செல்வி. R. துஸ்யந்தி - *ஊக்குவிப்பு வகுப்பு ஆசிரியர்*
திருமதி. பேரின்பமலர் கமலாதேவி - *சமையல்காரர்*
திரு. K செல்லத்துரை - *காவலாளி*

## ஆண்கள் நிலையம்

அருட்தந்தை P.றொனால்ட் சுஜீபன் **CMF** - *பொறுப்பாளர்*

**சிறுவர் பராமரிப்பாளர்**

திரு S பிரபாகரன்
திரு வு ஜெனிஸ்ரன்
திருமதி புஸ்பராணி

## வரோட் லைப் (F) வலுவூட்டல் நிலையம்

திரு. மனுவேல் அன்ரன் றொபேட் - *இணைப்பாளர்*
திரு. சாள்ஸ்மத்யூஸ் எட்மென்ராஜ் - *கணக்காளர்*
திருமதி. செல்வராஜன் கிருசாந்தினி - *காசாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. அமிர்தநாதன் கிறிஸ்ரி டானியல் - *இயன் மருத்துவ ஊழியர்*
செல்வி. திவ்யா செல்வராஜன் - *களஞ்சியப் பொறுப்பாளர்*
செல்வி. ஜஸ்ரின் பிரான்சிஸ் - *கொள்வனவு உத்தியோகத்தர்*
செல்வி. ரன்சீபா செபநாயகம் - *வரவேற்பாளர்*

## பயனாளிகளைப் பராமரிப்போர்

செல்வி. கொன்சி இராஜேந்திரராஜா
திருமதி. யேசுதாசன் சஜித்தா
செல்வி. ரூபல்லா சுப்பிரமணியம்
திரு. சுந்தரராஜா சசிகாந்தன்
திரு. அன்ரன் ஜெயராஜா மைதிலன்
திருமதி. டினேஸ் கில்ரன் றொக்சி
திரு. இரட்ணசிங்கம் பாலசுப்பிரமணியம — *வாகன ஓட்டுனர்*
திரு. யாதவராஜா நேமக்குமார் — தொழில்நுட்ப *ஊழியர்*
திரு. செல்லையா திருச்செல்வம் - *காவலாளி*
*திரு சுப்பிரமணியம் சுவேந்திரகண்ணன் - சுகாதாரத் தொழிலாளி*
*சமையல்காரர்*
*திருமதி. அன்ரனிராஜா* பிரபா
திருமதி. சோமசுந்தரம் பத்மரஜனி
திரு. கனகரட்ணம் ஜனகன் - *ஆசிரியர்*
திருமதி. சகாயராஜா மரிஸ்ரலா நிரஞ்சினி - *தையல் ஆசிரியர்*
திரு. செபமாலை றெஜிஸ் இரஞ்சிதராஜ் - *கணணி போதனாசிரியர்*
திருமதி. நடேசன் தெய்வானையம்மா - *துப்பரவு பேண் ஊழியர்*
திரு. நவரட்ணசிங்கம் டிலான் ரவறோஜன் - *இரவுநேரக் காவலாளி*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

கிளிநொச்சி ஊனமுற்றோர் வலுவூட்டல் நிறுவனம் "KAROD" 1990 ம் ஆண்டு நிறுவப்பட்டு, பலதரப்பட்ட மனிதநேயப் பணிகளை அர்ப்பணிப்பும் ஈடுபாடும் கொண்ட உள்ளக ஆளணியைக் கொண்டு விசேட தேவைக்கு உட்பட்டவர்களை இலக்குக் குழுவாக்கி பணியுாற்றி வந்தது. குறிப்பாக பல வருட காலமாக தொடர்ந்து கொண்டிருந்த உள்நாட்டுப் போர் பல்லாயிரக்கணக்கான மக்களை அங்கவீனப்படுத்திக் கொண்டிருந்த காலப்பகுதியில் இவ்வாறானதொரு தர்ம சேவையாற்றும் நிறுவனத்தின் தோற்றம் இன்றியமையாததாகக் காணப்பட்டது. சமூகம் சார் வலுவூட்டல் திட்டத்தினை (CBR) பிரதான செயற்றிட்டமாகக் கொண்டியங்கிய இந் நிறுவனம் காலவோட்டத்தில் பயனாளிகளின் மேம்பாட்டினையும் காலத்தின் தேவையினையும் கருத்திற்கொண்டு மேலும் பல பணிகளையும் ஆற்றுமளவுக்கு தன்னை விரிவுபடுத்திக் கொண்டது.

இருப்பினும் 2009 ஆம் ஆண்டு வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்தேறிய கொடூர வரலாற்று யுத்தத்தினால் சிதைந்து போன எம் மக்களின் இருப்பியலுடன் கூட, KAROD நிறுவனமும் ஒன்றாக தன்னுடைய நிர்வாக மற்றும் பௌதீக வளங்கள் உள்ளிட்ட அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக வேண்டியதாயிற்று. போரினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கான உடனடி மனிதாபிமானப் பணிகள் முன்னெப்பொழுதும் காணப்படாதவாறு குன்றெனக் குவிந்த வேளையும் அதுவே தான். எனவே இதன் காரணமாகக் கத்தோலிக்கத் திருச்சபையின் சபைகளில் ஒன்றான கிளரீசியன் சபையினர் முற்றுமாக KAROD நிறுவனத்தை மீளமைக்கும் நோக்கோடு, காலத்தின் தேவையை நன்குணர்ந்து **VAROD** (மாற்றுவலுவுள்ளோர்க்கான வலுவூட்டும் அமையம், வன்னி) எனும் புதிய பெயரில் வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லை ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கி 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பணிகளில் பாதம் பதித்தது. மே 2009 இல் VAROD நிறுவனம் தொண்டர் ஸ்தாபனமாக (Voluntary Organization) வவுனியா மாவட்டச் செயலகத்தில் பதியப்பட்டு நிறுவனமயப்படுத்தப்பட்டது.

தற்போது பலதரப்பட்ட நிதி அனுசரணையாளர்களின் ஆதரவுடன் ஒரு வருடகாலப் பகுதிக்குள் சுமார் நாற்பது பணியாளர்களுடன் அலுவலகம், பெண்கள் நிலையம், ஆண்கள் நிலையம், வலுவூட்டல் மையம் என ஒருமித்த சேவையினை வழங்கி வருகிறது

திரு.ம.அமிர்தானந்தன்
*நிர்வாக ஊழியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரோட் பெண்கள் வலுவூட்டல் நிலையம்



"ஒரு தயாள குணமுள்ளவன் கடவுளுக்கு அருகில் இருக்கின்றான். மனிதனுக்கு அருகில் இருக்கின்றான். சொர்க்கத்தின் அருகில் இருக்கின்றான். நரகத்திலிருந்து வெகுதொலைவில் தள்ளி இருக்கின்றான்." (நூல்- உதவிகள் செய்வோம் உயர்ந்தோங்கி வாழ்வோம்.)

எமது சமூகத்திலே பல்வேறுபட்ட இயல்புள்ளவர்கள் வாழ்கின்றார்கள். அதில் சாதாரண நிலையிலுள்ளவர்கள் ஒருபுறம் அசாதாரண நிலையிலுள்ளவர்கள் மறுபுறம். இங்கு நமது பார்வையை உற்றுநோக்குகின்றபோது பல்வேறுபட்ட வகையினர் எம் கண்ணெதிரே நடமாடுகின்றனர். அந்தப் பார்வையை வரோட் பெண்கள் நிலையத்திற்கு திருப்புகின்றபோது அங்கே அங்கங்கள் பாதிக்கப்பட்டவர்கள, மனவளர்ச்சி குன்றியவர்கள், கண்பார்வையை இழந்தவர்கள், நடத்தையில் மாறுபாடுடையவர்கள், உளத்தாக்கம் உடையவர்கள் போன்றோரைக் காண்கின்றோம். இவர்கள் வலுவற்றவர்கள் என்றே கணிக்கப்படுகின்றனர். இவர்களின் மனிதத்தை மதித்து உணர்வுகளைத் தட்டியெழுப்பி முழுமையான மனிதர்களாக சமூகத்திலே தாமும் ஒருவராக நிமிர்ந்து நிற்க வரோட் நிறுவனம் பல வழிகளிலும் ஆதரவும் ஊக்கமும் அளிக்கின்றது.

வரோட் நிறுவனம் ஆரம்பபித்த இந்த ஒருவருட காலத்தினுள் பெண்கள் நிலையத்தில் மொத்தமாக 34 குடும்பங்களைச் சார்ந்த 53 பயனாளிகள் நன்மை பெற்று வருகின்றனர். அதில் 24 பயனாளிகள் தமது உறவுகளுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.தற்போது மனவளர்ச்சி குன்றியவர்கள் - 07 பேர்,மனநோயாளிகள் 02 பேர், உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள் 07 பேர், பார்வையற்றோர் 01, அங்கம் பாதிப்பு 02 பேர், சாதாரண சிறுவர்கள் 11 பேர். (இவர்கள் எமது நிலையத்திலுள்ளஅதிக மன அழுத்தத்திற்கு உள்ளானோரின் பிள்ளைகள்)மொத்தமாக 29 பயனாளிகள் தற்போது தங்கியிருக்கின்றனர்.

இவர்கள் பலதரப்பட்ட வகைகளைச் சார்ந்தவர்களாக இருப்பதனால், அவர்களின் திறன்விருத்திக்கேற்ப பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இயலுமானவர்களுக்கு தொழிற்பயிற்சியாக பல வகையான கைவேலைகள் - தையல், கோழிவளர்ப்பு, சமையல், இசைக்கருவி மீட்டல், கணணி, ஆங்கிலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றனவும், விசேட பாடசாலை செல்லும் 07 மாணவர்கள், சாதாரண பாடசாலை செல்லும் 07 மாணவர்களுக்கும், திறன்விருத்தி, நாளாந்த செயற்பாடு, மேலதிக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. மேலும் ஒன்றுகூடல்கள், ஆன்மீக செயற்பாடுகள், கலை நிகழ்வுகள், உளவியல் கருத்தமர்வுகள், சுற்றுலா என்பவையும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அனைவருமே ஒவ்வொரு மாதமும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இவ்வாறு பல சவால்கள் கஸ்ரங்கள் இடையூறுகள் மத்தியில் இவர்களின் நலன்கருதி முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் கல்வியை கற்று வாழ்வில் முன்னேறவும், நல்லதொரு வாழ்வை தேர்ந்து கொள்ளவும், வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளவும் தன்னிச்சையாக செயற்படவும் மகிழ்ச்சியாக வாழவும் உதவி செய்கின்றோம். இந்த எதிர்நோக்கை அடைந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையும் நமக்குண்டு. இவ்வாறு பெண்கள் நிலையத்திலுள்ள பயனாளிகளின் வாழ்க்கை வட்டம் அசைந்து கொண்டிருக்கின்றது.

அருட்சகோதரி பேரின்பமலர்
*பொறுப்பாளர் - பெண்கள் நிலையம்*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரோட் ஆண்கள் வலுவூட்டல் நிலையம்



கடந்த 2009 ஏப்ரல் மாத இறுதிக் காலப்பகுதியில் நீதி மன்றின் ஊடாக ஐந்து மனநிலை குன்றியவர்கள் அவர்களது வலுவூட்டலுக்கென எம்மிடம் அனுப்பப்பட்ட நாளில் இருந்து மாற்றுவலுவுள்ள ஆண்களின் நிலையம்சார் வலுவூட்டலில் நாம் விசேட கவனம் செலுத்தி வருகின்றோம்.

எமது வரோட் ஆண்கள் நிலையத்தில் இன்று வரைக்கும் சிறுவர்கள், இளையோர்கள் என மொத்தமாக 17 ஆண்கள் வலுவூட்டல் பெற்றுள்ளார்கள். இவர்களுள் மனநிலை குன்றியவர்கள் மற்றும் அறிவுத்திறன் குறைந்தவர்கள் என 10 ஆண்களும் தமது பார்வையை முற்றிலும் இழந்தவர்களாக 06 ஆண்களும் தனது ஒரு காலினை இழந்தவராக ஒருவருமாக இன்று வரைக்கும் வலுவூட்டல் பெற்றுள்ளார்கள். மாவட்ட செயலகம் (கச்சேரி) இதுவரை எம்மிடம் 06 சிறுவர்களை வலுவூட்டலிற்கென அனுப்பியுள்ளது. அதே வேளை வவுனியா நீதி மன்ற சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு நிலையத்தின் ஊடாகவும், நேரடியாகவும் ஏழு ஆண்களை வலுவூட்டலிற்கென அனுப்பியுள்ளது.




எமது நிலையத்தில் இருக்கும் மாற்றுவலுவுள்ளோரை இச் சமூகத்துடன் ஒருங்கிணைக்கும் சந்தர்ப்பமும் சூழலும் உருவாகும் போது அவர்கள் மீண்டும் தங்களுடைய குடும்பங்களுடன் சமூகத்தில் இணைக்கப்படுகின்றனர். இவ்வாறு இதுவரை இரண்டு சிறுவர்கள் மீண்டும் தங்களது குடும்பங்களுடன் நீண்ட கால இடைவெளிக்குப்பின் இணைந்துள்ளார்கள். இவ்வாறான நிலையிலும் தனது விசேட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பயிற்சியை பெறுவதற்காக ஒருவரும், மற்றும் தனது கல்வியை குற்றெழுத்து மூலம் கற்பதற்காக ஒரு மாணவனும் எமது நிலையத்தில் இருந்து வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டு தமது பயிற்சிகளை ஆர்வத்துடன் கற்று வருகின்றார்கள். தற்போது 2010 ஜீன் மாதத்தில் எமது நிலையத்தில் 13 ஆண்கள் வலுவூட்டல் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

எம் நிலையத்திற்கு வருகின்ற பயனாளிகள் அனைவரும் மருத்துவ பரீட்சைக்கு உட்படுத்தப்படுகின்றனர். எம் நிலையத்தில் இருப்பவர்களின் வாழ்க்கைத் தரத்தை இன்னமும் உயர்த்த வேண்டும் என்பதற்காக நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு அதற்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. எம்மிடம் உள்ள



விசேட தேவைக்குட்பட்ட மனநிலை பாதிக்கப்பட்ட சிறுவர்கள் 'ஓஹான்' நிறுவனம் நடாத்துகின்ற "புது வாழ்வுப் பூங்கா" என அழைக்கப்படும் விசேட பாடசாலையில் விசேட க ல ் வ ி ை ய ப ் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கென நாளாந்த நடவடிக்கைகள் வடிவமைக்கப்பட்டு அதில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள பயிற்றுவிக்கப்படுகின்றனர். பார்வையை முற்றாக இழந்தோரில் பாடசாலை செல்லும் வயதுடையோர் சாதாரண பாடசாலைக்கு அனுப்பப்படுகின்றனர். இவர்களுக்காக குற்றெழுத்துப் பயிற்சி, வெள்ளைப்பிரம்பு பயிற்சி, கணனிப் பயிற்சி இசைக்கருவி பயிற்சி, விசேட தொழிற்பயிற்சி ( நாற்காலி பின்னுதல், தும்புத்தடி செய்தல் கயிற்றால் கால்மிதி சுவர் மாட்டிகள் பின்னுதல்) என்பன வழங்கப்படுகின்றன. இன்னும் உடல் ரீதியாக பாதிக்கப்பட்ட படிக்கக்கூடிய மாணவர் தமது கல்வியை தொடர்வதற்கும் வசதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திக்கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு மாற்றுவலுவுள்ள எம்மவர் கொண்டுள்ள வலுக்களை கண்டுணர பல வழிகளும் ஏற்படுத்தப்படுகின்றன.

எம்மிடம் வருகின்ற ஒவ்வொரு மாற்றுவலுவுள்ளவரும் தமது குடும்பத்தாலும், சமூகத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுஇ தத்தம் உரிமைகளுடன் வாழவேண்டும். இது எங்கள் கனவு. அனைவரது கனவாகவும் இது மாறவேண்டும். எமது பணியும் இன்னும் விஸ்தரிக்கப்பட்டு பலர் நன்மையடைய நாம் உழைக்கின்றோம்.

*"இயலுமோ? இயலாமையோ?- அது உங்கள் பதிலிலேயே தங்கியுள்ளது."*


அருட்தந்தை P.றொனால்ட் சுஜீபன் **CMF**
*பொறுப்பாளர் - ஆண்கள் நிலையம்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரோட் லைப்(F) வலுவூட்டல் நிலையம்- பம்பைமடு



கடந்த 30 ஆண்டுகளாக இலங்கைத் தீபகற்பத்தின் வடகிழக்குப் பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலை பல தீர்க்க முடியாத பிரச்சினைகளையும், துயரங்களையும் விளைவாகத் தந்திருந்தது .விசேடமாக மனநிலை பாதிக்கப்பட்ட உடல் ஊனமுற்ற, போசாக்குக் குன்றிய சாதாரண நிலையிலிருந்து அசாதாரண நிலைக்குத் தள்ளப்பட்ட மனித சமூகம் ஒன்று உருவாகியது. இச் சமூகத்தில் மாற்றுவலுவுடையோரை தம்முடைய பணி இலக்குக் குழுவாகக் கொண்டு. சமூகம் சார் புனர்வாழ்வு வேலைத்திட்டத்தை தனது அடிப்படைத் தத்துவமாக்கி வரோட் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

இக்காலப்பகுதியில் உடல் ஊனமுற்ற அல்லது உடலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட அல்லது உளவியல் ரீதியாக பாரிய நெருக்கடிகளைச் சந்தித்த மக்கள் குழுவினர் வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலுள்ள அரச வைத்தியசாலைகளுக்கு கொண்டு வரப்பட்டது யாவரும் அறிந்ததே.

இவர்களின் நிலைகண்டு இவர்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்யும்படியாக வரோட் நிறுவனத்திடம் மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வந்தனைக்குரிய இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் கொடுத்த அழைப்பிற்கும் ஊக்கத்திற்கும் ஏற்ப புனர்வாழ்வு நிலையம் ( VAROD 'Life' - வரோட் லைவ்) 11 மார்கழி 2009 அன்று ஆரம்பிக்கப்பட்டது.

பம்பைமடுவிலுள்ள ஆயருக்குச் சொந்தமான தென்னந்தோப்பில் அவசர அவசரமாக 45 க்கும் மேற்பட்ட கொட்டில்கள் அமைக்கப்பட்டு, நீர் வசதி, மின்சார வசதி, ஆரோக்கியகூட (மலசலகூட) வசதி என்பவற்றுடன் கூடிய வலுவூட்டல் மையம் நிர்மாணிக்கப்பட்டது. இப்பணியை செய்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வந்தனைக்குரிய எமது ஆயர், ZOA, CARE INTERNATIONAL, UNICEF போன்றோரின உதவி எமக்கு நிறைவோடு கிடைக்கப்பெற்றது.

கடந்த ஒரு வருடத்திற்குள் 105 பயனாளிகள் பயனடைந்திருக்கின்றார்கள். இவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள், இயன் மருத்துவ சிகிச்சைகள், தொழிற்பயிற்சிகள், உளவள உதவிகள் வழங்கப்படுகின்றது. இவர்களைப் பராமரிப்பதற்கென்று 32க்கும் அதிகமாக பணியாட்கள் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். கல்வி கற்க வேண்டியவர்களுக்கு கல்வி வசதியும் தொடர் கல்விச் செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. 24க்கும் மேற்பட்ட மாணவர்கள் இங்கிருந்து பாடசாலைகளுக்குச் செல்வதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் சமூகத்திற்குள்சென்று வேலைவாய்ப்புக்களைத் தேடக்கூடிய வகையில் தொழில்சார் பயிற்சிகளும் கணணி வகுப்புக்களும் வழங்கப்படுகின்றது.

வாழ்வின் பெரும் சுமைகளைச் சுமக்க முடியாமல் நொந்து போனவர்களுக்கு இப்பணியானது அர்த்தமுடைத்தே என்பது திண்ணம்.

திரு செபமாலை றெஜிஸ் இரஞ்சிதராஜ்
*Reports Associate*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகம் சார் வலுவூட்டல் நிகழ்ச்சி (CBR)

நோர்வே கரித்தாஸ் ஊடாக இலங்கை கரித்தாஸின் மூலம் வரோட் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட

ஓர் ஆண்டு

**சமூகம் சார் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டம்**
**மே 1, 2009 – ஏப்ரல் 31, 2010**

ஒரு வருட செயற்திட்ட அடிப்படையில் நோர்வே கரித்தாஸ் **சமூகம் சார் வலுவூட்டல்** நிகழ்ச்சித் திட்டத்திற்கென நிதி உதவி வழங்கியது. இலங்கை கரித்தாஸின் ஊடாக எங்கள் நிறுவனத்திற்கென ருபா 12,703,111.25 நிதி ஒதுக்கப்பட்டது. இந்நிதியானது திட்ட வரைபின்படி பின்வரும் வேலைத்திட்டங்களுக்கு வழங்கப்பட்டது.

- **மருத்துவ உதவி** *(மருத்துவ பரிசோதனை,மருத்துவ சிகிச்சை, மருத்துவ உபகரணங்கள்.)*
- **வாகனங்கள்** *(வாகனங்கள் கொள்வனவு, எரிபொருள், பராமரிப்பு, நடமாடும் சேவை)*
- **வலுவூட்டல் நிலையம்** *(நோயாளிகள் பராமரிப்பு,தலையனைகள். படுக்கை விரிப்புகள். மெத்தை. தளபாடங்கள், வீட்டு வாடகை)*
- **பயிற்சிகள்** *(இயன் மருத்துவம். உளவள உதவி,தொழிற் பயிற்சி, பனியாளர்களுக்கான வளத்தரைசார் பயிற்சிகள்பயிற்சி உபகரணங்கள்)*
- **அலுவலக உபகரணங்கள்**
- **அலுவலக ஊழியர்கள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூகம் சார் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பிரதேசங்களும் வலுவூட்டல் நிலையங்களும்.**



- வேப்பங்குளம்
- நெளுக்குளம்
- தரணிக்குளம்
- மறவன்குளம்
- சுந்தரபுரம்
- வாரிக்குட்டியூர்
- மணியர்குளம்
- தவசிகுளம்
- மதவுவைச்சகுளம்
- பண்டாரிக்குளம்
- பூவரசங்குளம்
- வரோட் பெண்கள் வலுவூட்டல் நிலையம்.
- வரோட் ஆண்கள் வலுவூட்டல் நிலையம்.
- வரோட் லைவ் (VAROD 'Life') வலுவூட்டல் நிலையம்.

**பயனாளிகள் பற்றிய விபரம்**

| விபரம் | ஆண் | பெண் |
|---|---|---|
| மருத்துவ பரிசோதனை | 266 | 137 |
| மருத்துவ உபகரணங்கள் | 248 | 159 |
| இயன் மருத்துவம் | 123 | 131 |
| உளவள உதவி | 97 | 195 |
| தொழிற் பயிற்சி | 119 | 88 |
| அலுவலக உழியர்கள் | 17 | 6 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத் திட்டங்கள்

**கிளிநொச்சியிலும், முல்லைத்தீவிலும் இரண்டு வலுவூட்டல் மையங்கள் அமைக்கப்பட வேண்டும்.**

அவை

- விசேட பாடசாலை
- வாழ்க்கைத்திறன் உயர்ச்சி மையம்
- சைகை மொழி அபிவிருத்தி மையம்
- இயன் மருத்துவ நிலையம்

என்பவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

## வரோட் நிலையத்தின் வலுவூட்டல் மையங்கள் பின்வரும் இலக்குகளை நோக்கியதாக அமைந்திருக்கும்.

**மருத்துவ வலுவூட்டல்**

- மாற்றுவலுவுடையோர்க்கான மருத்துவ பரிசோதனை
- மருத்துவ சிகிச்சையும், தொடர் மருத்துவ சிகிச்சையும்
- ஆயுள்வேத மருத்துவ உதவி
- ஆதார உபகரணங்கள் வழங்கல்
- போசாக்குணவு வழங்கல்

**பொருளாதார வலுவூட்டல்**

- வீட்டுத்தோட்டம்
- நெற்பயிர்ச்செய்கை
- தையல் வேலை
- கைவேலை
- சைக்கிள், மோட்டார் சைக்கிள் திருத்தம்
- சிறுதொழில், கடை
- மீன்பிடி

**சமூக வலுவூட்டல்**

- உளவள ஆற்றுகை
- ஊழியர்களுக்கான பயிற்சி
- மாற்றுவலுவுடையோரின் குடும்பத்திற்கு உளவள வழிகாட்டல்
- தனிப்பட்டோர்க்கான உளவள வழிகாட்டல்
- குழுமத்திற்கான உளவள வழிகாட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுவர்களுக்கும் இளையோருக்கமான வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டம்**

- ஆரம்பக்கல்வி
- கல்வி உபகரணங்கள் வழங்கல்
- தொழிற்பயிற்சி
- தச்சுவேலை
- மேசன்வேலை
- கணணி
- உலோகவேலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரோட் நிறுவனத்தின் கண்காட்சியும் விளையாட்டுப் பெருவிழாவும்
# (VAROD SPORTS & EXHIBITION FIESTA)


**முதல் நாள் நிகழ்வுகள் June 25, 2010 (Day for Sports)**

## சிறியோருக்கான நிகழ்ச்சிகள்

- நிறம் தெரிதல் (வயது 5-10, இருபாலாரும்)
- பணிஸ் உண்ணுதல் (வயது 5-10, இருபாலாரும)
- 100m ஓட்டம் (வயது 11-16,ஆண்கள்-மனவளர்ச்சி குன்றியவர்கள்)
- 100m ஓட்டம் (வயது 11-16,பெண்கள்-மனவளர்ச்சி குன்றியவர்கள்)
- குறிபார்த்து எறிதல் (வயது 11-16,ஆண்கள்)
- குறிபார்த்து எறிதல் (வயது 11-16,பெண்கள்)
- நீளம் பாய்தல் (வயது 11-16,பெண்கள்)
- ஞாபகசக்தி (வயது 11-16,பெண்கள் - எலும்பு முறிவு உள்ளவர்கள்)

## பெரியோர்க்கான நிகழ்ச்சிகள்

- 100m சக்கர நாற்காலி ஓட்டம் (ஆண்கள்-இடுப்புக்கு கீழ் இயங்காதவர்கள்)
- 100m சக்கர நாற்காலி ஓட்டம்( ஆண்கள்-ஒரு கால் இல்லாதவர்கள்)
- 100m வேக நடை (பெண்கள்- ஒரு கால் இல்லாதவர்கள்)
- குண்டெறிதல் (ஆண்கள்)
- குண்டெறிதல் (பெண்கள்)
- 100 m வேகநடை (ஆண்கள் - ஒரு கால் கட்டை)
- 100 m வேகநடை (பெண்கள் - ஒரு கால் கட்டை)
- 100m வேக நடை (ஆண்கள்- ஒரு கால் இல்லாதவர்கள்)
- பொருட்களை இனம் காணல் (கண்பார்வை இல்லாதவர்கள்)
- சதுரங்கம்
- டாம்
- கரம்போட்
- கரப்பந்தாட்டம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் நாள் நிகழ்வுகள் June 26, 2010 (Festive Day)



- **வரவேற்பு**
- **மங்கள விளக்கேற்றல்**
- **சர்வமத பிரார்த்தனை**
- **ஒலிம்பிக் தீபமேற்றல்**
- **விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள்**
  - † நீர் நிரப்புதல் (வயது 5-10, இருபாலாரும்)
  - † நீர் நிரப்புதல் (வயது 11-16, இருபாலாரும்)
  - † பலூான் உடைத்தல் (வயது 5-10, இருபாலாரும்)
  - † 100 m வேகநடை (ஒரு கால் இல்லாதவர்கள் - ஆண்கள்)
  - † முட்டி உடைத்தல் (கண்பார்வை இல்லாதவர்கள்)
  - † 75m மணி ஓசை கேட்டு ஓட்டம் (கண்பார்வை இல்லாதவர்கள்)
  - † சக்கர நாற்காலியில் சாகச விளையாட்டு
  - † **பொது விளையாட்டுக்கள்**
  - † வினோத உடை
  - † கயிறு இழுத்தல்
  - † சங்கீதக் கதிரை



- **அரங்க நிகழ்வு – நாடகம்**
- **ஆண்டறிக்கை**
- **பரிசளிப்பு**
- **உரைகள்**
  - † பிரதம விருந்தினர்
  - † கௌரவ விருந்தினர்
- **நன்றி உரை**
- **கண்காட்சி ஆரம்பம்**
- **Refreshment**

இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.





நிறைவேற்று இயக்குனர்
ஊழியர்கள்
பயனாளிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ST

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் படைப்பில் உயர்ந்த படைப்பாம் மனுக்குலத்தில் இவர்களும் அங்கத்தவர்கள்.
இவர்களும் சமூகத்தில் தலைநிமிர்ந்து நம்பிக்கையுடன் வாழ நீங்கள் விரும்புகிறீர்களா?

You can help...
If you believe these Differently Abled Persons Deserve a FUTURE...

## Contact VAROD



Contact Persons:
Rev. Fr. T. L. Rohan Dominic cmf
President- VAROD
St. Claret Seminary,
No. 90, Baseline Road,
Kattuwa,
Negombo, Srilanka.
0094-72207340, tlrdcmf@gmail.com

Rev. Fr. Albert J. Arulraja, cmf
Executive Director- VAROD
No.15, 8th Lane, Manner Road,
Veppankulam,
Vavuniya, Srilanka.
0094-24-5672711, varodserve@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org